**சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(20-02-2016 – 24-02-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 19-02-2016

**கடந்த கால வானிலை 16-02-2016 முதல் 18-02-2016 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 3-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-77 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 14-15 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 24-02-2016 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **20.02.16** | **21.02.16** | **22.02.16** | **23.02.16** | **24.02.16** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 2 | 2 | 0 | 2 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35 | 35 | 35 | 35 | 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 64 | 64 | 64 | 64 | 64 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 42 | 42 | 42 | 42 | 42 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 14 | 14 | 14 | 14 | 14 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

**குறுஞ்செய்தி:**

எதிர்வரும் ஐந்து நாட்களில் இலேசான தூறல் சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் பருப்பு வகைகள்**

**பருவம்: நெல்- முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம், பருத்தி- முதிர்ச்சி பருவம்**

- வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கலாம்.
- பருத்தியில் வெள்ளை ஈக்கள் மற்றும் தத்துப்பூச்சிகள் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 % @ 5 மிலி அல்லது தையோமீத்தாகசம் 6 கிராம் 10 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- கரும்பு பயிருக்கு 2.5 சதவித அளவு பொட்டாஷ் மற்றும் யூரியா கலந்த தண்ணிரை 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம்.
- கரும்பில் தண்டுத்துளைப்பான் பூச்சியினைக் கண்காணிக்க வேண்டும். பூச்சியின் தாக்கம் அதிகமாக காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த கார்போபியூரான் 3% G @ 10 கிலோகிராம்/ ஏக்கர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.